[21st November 1955

Assignment of house-sites to Harijans

* 2659 *Q.*—Sri A. RATNAM : Will the Hon. the Minister for Religious Endowments and Transport be pleased to state whether the Government have assigned any house-site to the Harijan residents of Kadambattur, Tiruvallur taluk, during the past five years; and if not, why?

The Hon. Sri B. PARAMESWARAN : The Government sanctioned the acquisition of an extent of 2·72 acres of private land in Kadambattur village for provision of house-sites to Harijans in 1951. The land was actually taken possession of in 1952 and was assigned to Harijans in 1954.

* 2660 *Q.*—Sri S. R. ARUMUGAM : Will the Hon. the Minister for Religious Endowments and Transport be pleased to state—

(*a*) whether it is a fact that Government have acquired land for house-sites for Harijans in Sarcarsamakulam village in Coimbatore taluk, Coimbatore district;

(*b*) if so, the cost and the extent of lands acquired; and

(*c*) to how many persons the lands have been distributed ?

The Hon. Sri B. PARAMESWARAN : (*a*) No, Sir.

(*b*) & (*c*) Do not arise.

Sri A. RATNAM : கனம் சபாநாயகர் அவர்களே, கடம்பத்தூர் கிராமத்திலுள்ள ஹரிஜனங்கள் 1955-ம் ஆண்டில் தர்காஸ்து நிலம் கோரியிருக்கிறார்கள். அவர்கள் ஏற்கெனவேயே வீடுகள் கட்டிக் கொண்டிருக்கும்போது அவர்களுக்கு இன்று வரையில் அந்த நிலம் பட்டா செய்து கொடுக்கப்படாமல் இருப்பதற்குக் காரணம் என்ன ? பட்டா செய்து கொடுப்பதற்கு அரசாங்கத்தாரால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைச் சொல்வார்களா ?

The Hon. Sri B. PARAMESWARAN : அதைத்தான் இப்பொழுது சொன்னேன். அவர்களுக்கு நிலம் கொடுக்க அங்குள்ள நிலம் அக்வையர் செய்யப்பட்டுவருகிறது. விவசாய ஹரிஜனங்கள் யார் யாருக்குக் கொடுக்க வேண்டுமோ அவர்களுக்குக் கொடுத்து வருகிறார்கள்.

Sri S. R. ARUMUGAM : கோயம்பத்தூர் ஜில்லாவில், நானும், மாஜி மந்திரி வி. ஸி. பழனிசாமி கவுண்டர் அவர்களும், மாஜி சபாநாயகர் சிவஷண்முகம் பிள்ளை அவர்களும் ஒரு கிராமத்திற்குப்போய் ஹரிஜனங்களுக்குக் கொடுப்பதற்காக சர்க்கார் வாங்கியிருக்கும் நிலத்தைப்பார்த்தோம். மூன்று வருஷங்களுக்கு முன்னால் அந்த நிலங்கள் வாங்கப்பட்டிருந்தும் இன்னமும் அந்த நிலங்கள் பிரித்துக் கொடுக்கப்படவில்லை. ஆனால் அம்மாதிரி நிலம் வாங்கவில்லையென்று கனம் மந்திரி அவர்கள் தற்போது பதில் சொல்லுகிறார்கள். இம்மாதிரியாக தவறான தகவலைக் கொடுத்த அதிகாரிகளின் மீது சர்க்கார் தக்க நடவடிக்கை எடுப்பார்களா என்று கேட்கிறேன்.

The Hon. Sri B. PARAMESWARAN : ஆனால் அரசாங்கத்தார் 3,450 ரூபாய்க்கு அக்கிரகாரம் என்ற கிராமத்தில் நிலம் வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள்.